(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 29.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 யூன் 06 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட ‘ஊழல் எதிர்ப்பு’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

‘ஊழல் எதிர்ப்பு’ எனும் சட்டமூலம் அரசியலமைப்புடன் இணங்குகின்றமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கீழ் குறிப்பிட்டுள்ளவாறாகும்:-

சட்டமூலத்தின் வாசகங்கள் 1, 2(1)(ஊ), 2(2), 3(2), 4(1)(அ), 4(1)(ஆ), 4(3), 17(1), 21, 31(2), 163(2)(ஏ), 40, 48(3), 49(1)(ஊ), 50(1)(அ), 53(1), 62(1), 65, 67(5 ), 71(6) மற்றும் (8), 80, 93, 99, 101, 112, 149 மற்றும் 162 ஆகியவை அரசியலமைப்பிற்கு முரணானவை.

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை சட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடுகள் நின்றுவிடும்.

மேற்படி திருத்தங்களுக்கு மேலதிகமாக, சட்டமூலத்தின் 8(3), 136, 141, 142 மற்றும் 156 ஆகிய வாசகங்களுக்கு மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் குறிப்பிட்டுள்ள திருத்தங்களின் ஊடாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டிய விடயங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும் என உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.”

**II**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘மாகணசபை தேர்தல்கள் (திருத்தம்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனு மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

சட்டமூலத்தின் 3 ஆம் வாசகத்தினை திருத்துவதற்கும் மற்றும் 4 ஆம் வாசத்தின் நீக்குவதற்குமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டு சட்டமூலமோ அல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்பக்கு ஒவ்வாதனவாகவிராது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**III**

"இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவில்" பணியாற்றுவதற்காக நான் கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண அவர்களின் தலைமையில் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களை நியமித்துள்ளேன் என்பதை பாராளுமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ நிமல் லான்சா

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே"

**IV**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக நியமிக்கப்பட்ட அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பணியாற்றுவதற்காக பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

1. மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

   கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

2. நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

   கௌரவ மர்ஜான் பளீல்

3. தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

   கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

4. சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

   கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

5. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

   கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

6. வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

7. உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

8. சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ ஜயந்த கெட்டகொட

9. வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ காமினி லொக்குகே

10. சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

11. சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

12. ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

13. வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

**V**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா அவர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**VI**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக கௌரவ மிலான் ஜயதிலக்க அவர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**VII**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகள் மற்றும் 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2023 மே 26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைவாக, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2022 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(v) 2022 ஆம் ஆண்டுக்கான அரச நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vi) 2022 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vii) 2022 ஆம் ஆண்டுக்கான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(viii) 2022 ஆம் ஆண்டுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்கம் ஆகியன தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2023.04.01 முதல் 2023.04.30 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(5) கல்வி அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்கறிக்கையும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கமத்தொழில் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கமத்தொழில் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆம் திகதிய 2324/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து அக்கட்டளை சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6 (3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2) (ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ii) 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iv) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(v) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(vi) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(vii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/53 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(viii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/54 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ix) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/55 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(x) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/56 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xi) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/57 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 13 ஆம் திகதிய 2262/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xiii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 127 ஆம்பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின்

கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xiv) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதிய 2298/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xv) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 321 ஆம் பிரிவுகளின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xvi) 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(xvii) 2020/2021 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை;

(xviii) 2021 ஆம் ஆண்டுக்கான ஜய கண்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டின் ஆண்டறிக்கை;

(xix) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் வருடாந்த அறிக்கை;

(xx) 2019 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை;

(xxi) 2019/2020 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் ஆண்டறிக்கை;

(xxii) 2020 ஆம் ஆண்டுக்கான விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை;

(xxiii) 2019/2020 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை;

(xxiv) 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கை;

(xxv) 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆண்டறிக்கை;

(xxvi) 2021 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் ஆண்டறிக்கை; மற்றும்

(xxvii) 2020/2021 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2இ, 5 மற்றும் 5அ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2292/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி டபிளயூ.டீ.ஜே. செனவிரத்ன அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம்; மற்றும்

(ii) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ அஜித் மான்னப்பெரும அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2021 ஆம் ஆண்டுக்கான வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை ஆண்டறிக்கை தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) படல்கம, கிழக்கு கொடிகமுவ, கமகே வத்த, 84 ஏ எனும் முகவரியில் வதியும் திரு. பனம்பரகே சஞ்ஜீவ பிரஸாத் பர்னாந்துவினது 2023.03.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இந்திக அனுருத்த ஹேரத் சமர்ப்பித்தார்.

(2) தொடம்கஸ்லந்த, லிஹினிவெஹெர குடியிருப்பு, இல. 06 இல் வதியும் திரு. பி.ஏ. லலித் பிரான்சிஸினது 2023.04.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜே.சீ. அலவத்துவல சமர்ப்பித்தார்.

(3) மஹகம தெற்கு, உதடியாவல எனும் முகவரியில் வதியும் திருமதி டி.எஸ்.ஐ.ஏ. இரேஷா நிஷாமணீயினது 2023.04.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வருண லியனகே சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 17 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1):** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6 (3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மு.ப. 11.15 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்குவாராக” என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.12.35 மணிக்கு கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்குவாராக” என நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.2.02 மணிக்கு கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2):** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவுகளின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/53 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/54 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/55 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில்

பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/56 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/57 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**17. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 சனவரி 13 ஆம் திகதிய 2262/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**18. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 11 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 127 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**19. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 12 ) :** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின்

கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதிய 2298/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**20. வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.13 ):** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 321 ஆம் பிரிவுகளின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**21. “2019 நவம்பர் தொடக்கம் இன்று வரையிலான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும் அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு” தாபிக்கப்படுதல் பற்றிய தீர்மானத்திற்கான திருத்தம்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2023 மே 26 ஆம் திகதி நடத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், 2023 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் உரியமுறையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்:—

பெயர் :

பெயர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

“அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு”;

I ஆம் பகுதி:

இரண்டாவது பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

“நிதி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளினால் அல்லது அமைச்சரவையினால் வேண்டுமென்றே இப் பொருளாதாரக் குற்றம் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் புலனாய்வு செய்ய வேண்டியது பாராளுமன்றத்தின் பொறுப்பு என்பதாலும்;”

மூன்றாவது பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

“வரி நிவாரணங்களை வழங்குதல், கடன் தவணைகளைச் செலுத்தாதிருத்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்தல், ரூபாயின் பெறுமதியை துரிதமாக மதிப்பிழக்கச் செய்தல், உத்தியோகபூர்வ பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைதல், நாட்டின் பணவீக்கமானது உச்ச பணவீக்க மட்டம் வரை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தல் போன்ற காரணிகள் இந்நாட்டின் நிதி வங்குரோத்து நிலைக்கு காரணங்களாக அமைந்துள்ளதாலும்;”

மூன்றாவது பந்தியின் (அ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

"(அ) இதுவரை எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடியையும் நிதி வங்குரோத்து நிலையையும் நாடு எதிர்கொண்டமையானது, அது தொடர்பில் பொறுப்பு வகித்த ஆட்கள் தமது பணியை உரியவகையில் மேற்கொள்வதற்குத் தவறியதன் காரணத்தினால் இடம்பெற்றதா என்பதையும்;"

மூன்றாவது பந்தியின் (ஆ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

"(ஆ) குறிப்பிட்ட நிதி வங்குரோத்து நிலையைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனரா என்பதையும்;"

மூன்றாவது பந்தியின் (ஈ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:-

"(ஈ) அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளையும் நிதி வங்குரோத்து நிலையையும் எதிர்கொள்வதற்கு பங்களிப்புச் செய்த இதர விடயங்கள் இருந்தனவா என்பதையும்;"

மூன்றாவது பந்தியின் (உ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

"(உ) எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கும் நிதி வங்குரோத்து நிலைக்கும் நாடு தள்ளப்படுவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய இதர விடயங்கள் இருக்கின்றனவா என்பதையும்; மற்றும்"

"மேலே திருத்தப்படாத, 2023 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் உரியமுறையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஏனைய பகுதிகள் மாற்றமடையாதிருக்கும்."

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**22. ஒத்திவைப்பு (மூங்கில் கைத்தொழிலை ஊக்குவித்தல்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என கமத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 5.00 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினரால் 2023 யூன் 07 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.